**ARTICLE 14 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00041**
Vol. 20, No. 01 (October 2026) – Part I | pp. 78–81
Received: 1 October 2026 • Accepted: 1 October 2026

# தென்மாவட்ட நாட்டுப்புற இலக்கியங்கள்

**முனைவர். விஜயலட்சுமி இரா**[1,*]
[1]வள்ளியம்மாள் மகளிர் கல்லூரி, சென்னை – 600 102., India
***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** முனைவர். விஜயலட்சுமி இரா — viji.grv@gmail.com

### ஆய்வுச் சுருக்கம்
தென்மாவட்ட நாட்டுப்புற இலக்கியங்கள் என்று தலைப்பின் வாயிலாக தாலாட்டுப்பாடல்கள், பழமொழிகள், சிவகங்கை சரித்திரக் கும்மி கூறும் கலைநிகழ்வுகள், வட்டார மற்றும் நகர்சார் நாட்டுப்புறக் கதைப்பாடல்கள், தேனி மாவட்டத்து தொழில்ப்பாடல்கள் குறித்து எடுத்துரைக்கப்படுகிறது.

**Keywords / திறவுச் சொற்கள்:** தாலாட்டு; பழமொழிகள்; சரித்திரக்கும்மி; தனுஷ்கோடி; தொழில்

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** இரா, மு. வி. (2026). தென்மாவட்ட நாட்டுப்புற இலக்கியங்கள். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 1, –.

## முன்னுரை

ஒரு சமூகத்தின் வரலாறு மற்றும் வாழ்க்கை முறைகளை வெளிப்படுத்த அச்சமுகத்தின் நாட்டுப்புறக்கலைகள், நாட்டுப்புறப் பாடல்கள் பயன்படுகின்றன. மனிதன் தன் வாழ்வில் கடைப்பிடித்து வந்த பழக்கங்கள் காலத்தின் மாற்றத்தால் வழக்கமாக மாறியது. இவ்வழக்கமே காலப்போக்கில் பண்பாடாக மாறியது. இதுவே பண்புள்ள மனிதனையும், மனித சமுதாயத்தையும் உருவாக்கும் கருவியாக அமைந்திருக்கிறது. ஒரு நாட்டு மக்களின் நாகரிகத்தை, பண்பாட்டை, பழக்கவழக்கங்களை வரலாற்றை நாட்டு நடப்பை உண்மையான முறையில் படம் பிடித்துக் காட்டுவது நாட்டுப்புற இலக்கியமாகும் என்பதனை வெளிப்படுத்துவதாக இக்கட்டுரை அமைகிறது.

## தாலாட்டுப்பாடல்கள்

குழந்தைகளை மகிழ்ச்சிப்படுத்தும் அல்லது தூங்கசெய்யும் சூழலில் தாலாட்டுப் பாடல்கள் பாடப்படுகின்றன. தால் என்று சொல்லுக்கு நாக்கு என்று பொருள். நாவினை அசைத்துப் பாடுவதால் தாலாட்டு என்று பெயர் பெற்றது. தாயின் கற்பனை வளத்தின் வெளிப்பாடே தாலாட்டுப் பாடல்கள் ஆகும்.

"ஆராரோ ஆரிராரோ
என் கண்ணே நீ உறங்கு
வாழைக் கனி தருவேன்
வாடாமல் நான் வளர்ப்பேன்"

வாய்மொழியாக வழங்கி வரும் இப்பாடல் குழந்தையின் உடல், உள்ள வளர்ச்சிக்கு பயன்படுவதாகவும் உள்ளது. குழந்தையின் அழுகை சிணுங்களால் உணர்சிகளின் நரம்புகளையே மீட்டி வருகிறது என்கிறார் தமிழண்ணல். (1966:12)

முதன்முதலாகத் தமிழ் இலக்கியத்தில் தாலாட்டுப் பாடிய பெருமை பெரியாழ்வாருக்குரியது "குழவி மருங்கினும் கிழவதாகும்" (தொல். புறம். 82) என்று தொல்காப்பியத்திலும் தாலாட்டின் கூறுகள் இடம் பெற்றுள்ளதைக் காணமுடிகிறது. மேலும் தாலாட்டுப்பாடலுக்கு அடிவரையறை இல்லை என்றும் தாயின் மனநிலைக்கு ஏற்பவும், குழந்தையின் உறக்க நிலைக்கு ஏற்பவும் தாலாட்டு பெரியதாகவோ சிறியதாகவோ இருக்கும் என்று டாக்டர் த. ரெஜித்குமார் அவர்கள் குறிப்பிடுகிறார். ஆனால் அத்தகைய சிறப்பு பெற்று தாலாட்டுப் பாடல்களைப் பாடும் வழக்கம் இளையதலைமுறையினரிடம் குறைந்து காணப்படுகிறது. வயதானவர்களே இப்பாடல்களைப் பாடுகின்றனர் என்றே கூறலாம்.

## பழமொழிகள்

நாட்டார் இலக்கிய வகைமைகளுள் மிகவும் பழமையானவை பழமொழிகளாகும். பழமொழிகள் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் ஆற்றல் வாய்ந்தது. இதனை தொல்காப்பியர்

## " நுண்மையும் சுருக்கமும் ஒளியுடைமையும்

எண்மையும் என்று இவை விளங்கத் தோன்றி குறித்த பொருளை முடித்தற்குவரூஉம் ஏது நுதலிய முதுமொழி என்ப" (தொல். சொல். 165)

என்று கூறுகிறார். பழமொழிகளை பெரும்பாலும் எல்லா விதமான சூழல்களிலும் மக்கள் கையாளுகின்றனர். பழமொழியின் தன்மையினை டாக்டர் த. ரெஜித்குமார் அவர்கள் பழமொழிகள் பொதுவாக உண்மையின் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும் மக்களிடையே வழக்கில் உள்ளதாகவும் அளவில் சிறியதாகவும் இருக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறார். உலகில் உள்ள அனைத்துப் பொருட்கள் பற்றியும் பழமொழிகள் பேசுகிறது. பழமொழிகள் தொடாத பொருளே இல்லை எனலாம். பழமொழிகளின் கருப்பொருளை 1. மக்கள் இனம், விலங்கினம், மரம், செடி, கொடி இனம், பண்பாடு, பல்பொருள் பற்றியது எனப்பிரிக்கலாம் என்று சு. சக்திவேல் அவர்கள் நாட்டுப்புற இயல் ஆய்வு என்ற நூலில் குறிப்பிடுகிறார். உதாரணமாக வேளாண்மை குறித்து இடம்பெறுகின்ற பழமொழியினை நாம் இங்கு காணலாம்.

" அகல உழுவதை விட ஆழ உழு
நன்செய்க்கு ஏழு உழவு, புன்செய்க்கு நான்கு உழவு "

என்று இடம்பெற்றுள்ளது. இவ்வாறு அனைத்து பொருளிலும் பழமொழிகள் இடம்பெற்றுள்ளது.

## சிவகங்கை சரித்திரக்கும்மி கூறும் கதை நிகழ்வுகள்

சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதரும் அவரது இளையராணியும் காளையார்கோவிலில் சாமி கும்பிட்டிருக்க, முத்துராணி வேலு நாச்சியார் கொல்லங்குடியில் தங்கியிருந்தார். கோவிலில் தீபாராதனை பார்த்துவிட்டு வெளியே வந்தபோது நவாப்படைகளும், ஆங்கிலேய படைகளும் சேர்ந்து பீரங்கித் தாக்குதல் நடத்திய போது, முத்து வடுகநாதரும் அவரது மகளும் இறந்து போன வரலாற்றை ஜெகாதா அவர்கள் “வரலாறு கூறும் வட்டார இலக்கியம்” என்ற நூல் வழியாக எடுத்துரைக்கின்றார்.

"கொல்லங்குடி தன்னில் பெரிய ராணி

குணமுடனே அங்கு இருந்து கொண்டாள்...

வல்லபமாக இளையராணி மகா
ராசாவுங் காளையார்கோவில் வந்தார்.

வேளையறிந்து பீரங்கிக்குண்டை
விருவிரென்று யேவிவிட்டார்."

என்ற இப்பாடல் சிவகங்கை சரித்திர கும்மி முத்துவடுகநாதரின் உயிர்தியாகத்தை எடுத்துரைக்கின்றது.

## வட்டார மற்றும் நகர்சார் நாட்டுப்புறக் கதைப் பாடல்கள்

வட்டார மற்றும் நகர்சார் நாட்டுப்புறக் கதைப் பாடல்கள் வழி அனைத்து வட்டாரம் மற்றும் நகரம் சார்ந்த வரலாறு, வாழ்வியல், பண்பாடு மற்றும் நாகரிகம், பற்றிய அனைத்து செய்திகளையும் நாம் அறிகிறோம். அவ்வகையில் டாக்டர் கே. ஏ. குணசேகரன் அவர்களின் நகர்சார் நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் என்ற நூலில், தனுஷ்கோடி அழிந்த கதையினை,

" தனுஷ்கோடியிலுள்ள பழங்காலக் கட்டிடமெல்லாம்
தரை மட்டமாக இடிய - அய்யய்யோ வென்று
சத்தமிட்டு மக்கள் மடிய - நிமிசத்திலே
சமுத்திர தேவியவள் கணக்கற்ற ஜனங்களைத்
தாவியே விழுங்கி முடிய"

என்ற பாடல் வழி குறிப்பிடுகிறார். கொடுமையான புயல் வீசியது. புண்ணிய தலமாம் தனுஷ்கோடி தரைமட்டமானது. பாம்பன் பாலத்தில் ரயில் விழுந்தது. தமிழ் நாடெங்கும் புயலால் பெருத்த சேதங்கள் ஏற்பட்டு மக்களின் மனதை பாதித்த செய்தியை இக்கதைப்பாடலில் மிக அழகாக குறிப்பிட்டுள்ளார்.

## தேனி மாவட்டத்து தொழில் பாடல்கள்

தமிழகத்தின் தேனி மாவட்டத்தில் நாட்டுப்புறப்பாடல்கள் இன்றுவரை சிறப்பாக பாடப்பட்டு வருகின்றன. தாலாட்டு, கும்மி, தொழில் மற்றும் ஒப்பாரி எனப்பல நாட்டுப்புறப்பாடல்கள் உள்ளன. அவற்றுள் தொழில்பாடல்கள் குறித்து இடபெற்றுள்ள பாடல்கள் குறித்து பார்ப்போம். தொழில் புரியும் போது மக்கள் பாடும் பாடல்கள் தொழில்பாடல்கள் எனப்படுகின்றன. தொழிலின் சிரமமும் களைப்பும் தெரியாமல் இருக்கப்பாடுகின்றனர். தொழில் பாடல்கள் தொழிலாளர்களது இன்ப துன்பங்களையும், நெஞ்சக் குமுறல்களையும், ஆசாபாசங்களையும், விருப்பு வெறுப்புகளையும் வெளிப்படுத்துகின்றன. இங்கு ஆண் பெண் இருவரும் சேர்ந்து பாடும் ஒரு தொழில் பாடலை

பெண் : கத்தரிக்கா தோட்டக்காரா
எங்க கவலாண்ட புள்ளையாண்ட
கார்த்திக தீபத்துக்கு ஆச மச்சானே
நீங்க காய் கொடுத்தாலாகாதோ
நேச மச்சானே
ஆண் : காய் கொடுத்திடுவேன்
காய் கொடுத்துடுவேன்
புள்ள கல கலன்று பேசிடுவேன்

முனைவர் க. சத்திய பிரியா ஞானவேல் அவர்கள் குறிப்பிடுகிறார்.

Vol. 20, No. 01 (October 2026) – Part I • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

இத்தகைய தொழில் பாடல்கள் வாயிலாக மக்கள் செய்த தொழில்கள் பற்றியும், அத்தொழிலின் நுட்பங்கள் பற்றியும், அவர்கள் வாழ்வில் ஏற்பட்ட ஏற்றத்தாழ்வுகள் மற்றும் சமுதாய அமைப்பைப் பற்றியும் நாம் அறிந்து கொள்கிறோம்.

## முடிவுரை

இத்தலைப்பின் வாயிலாக பண்டைத்தமிழர்களின் அறிவு நுட்பம், பண்பாடு, நாகரிகம், கலாச்சாரம் ஆகியவை வெளிப்படுகிறது.

## துணைநூற் பட்டியல் (References)


1. முனைவர் க. சத்திய பிரியா ஞானவேல், தேனி மாவட்டத்து நாட்டுப்புறப்பாடல்கள் – ஆய்வு, சான்லாக்ஸ் பதிப்பகம், மதுரை.
2. டாக்டர் த. ரெஜித்குமார், நாட்டுப்புற இயல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-98.
3. டாக்டர் கே. ஏ. குணசேகரன், நகர்சார் நாட்டுப்புறக் கதைப்பாடல்கள்.
4. ஜெகதா, வரலாறு கூறும் வட்டார இலக்கியம், பிரியா நிலையம், சென்னை.
5. டாக்டர் சு. சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை-108.


© 2026 முனைவர். விஜயலட்சுமி இரா. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..